**அசல் வழக்கு எண் : 112/2019**

**நாள்: 25.11.2025**

**வா.சா.1–செல்வம், த/பெ.மாதையன் (எ) ஜடையர்**

1ம் வாதி மற்றும் வாதியின் வழக்கறிஞர் ஆஜர். 2–ம் பிரதிவாதி மற்றும் 1 முதல் 4–ம் பிரதிவாதிகளின் வழக்கறிஞர் ஆஜர்.

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் வா.சா.1–ன் குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்த என் வழக்குரையில் தாவா சொத்தானது எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரத்தை நான் கூறவில்லை என்றால் எனது தாயின் பெயரில் இருந்தது. தாவா சொத்தானது எனது அனுபவத்தில் இல்லை என நான் எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் தான் உள்ளது. எனது வழக்குரையில் நான் வழக்கு சொத்துக்கான பட்டா எண்ணை குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். சர்வே எண்.101/1–ல் அமைந்துள்ள நிலத்திற்கு எங்கள் குடும்பத்தினரிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் வழக்கு சொத்தினை நாங்கள் எங்களுக்குள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்பதால் தான் நான் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. இவ்வழக்கு சொத்திற்கான பட்டாவானது தற்போது கிருஷ்ணமூர்த்தி மற்றும் சந்திரசேகர் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கான என் பெயரில் உள்ள பட்டா, சிட்டா, அடங்கல், கந்தாய ரசீது ஆகியவற்றை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது பொய் என்றாலும், இவ்வழக்கு சொத்திற்கான வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் எனது பெயரில் இல்லை என்றாலும் சரியல்ல.

3. இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் நான் இவ்வழக்கு சொத்திற்கான புலப்படத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ–1 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தில் இல்லாத சொத்துக்கு நான்

தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது பிரதிவாதிகளுக்குண்டான செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கு சொத்திற்கு அருகில் சர்வே எண்.101/2–ல் சந்தியப்பனுக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணானது தற்போது 101/2A வாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. புல எண்.101/2A–ல் அமைந்துள்ள நிலமானது 2–ம் வாதியான சேகர் என்பவரின் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து எனக்கு தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தான புல எண்.101/1D–ல் அமைந்துள்ள நிலமானது 1மற்றும் 2ம் பிரதிவாதிகளான கிருஷ்ணமூர்த்தி மற்றும் சந்திரசேகர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றாலும், சந்தியப்பன் பெயரில் கிரையம் பெற்று தற்போது உட்பிரிவு செய்யப்பட்ட புல எண்.101/2Aல் அமைந்துள்ள நிலமானது 2–ம் வாதியான சேகர் பெயரில் உள்ள நிலம் என்றாலும், மேற்படி புல எண்ணில் அமைந்துள்ள நிலமானது எனது பெயரிலும், என் அண்ணனான 2–ம் வாதியின் பெயரிலும் உள்ளது.

5. புல எண்.101/1D மற்றும் புல எண்.101/2A–ல் அமைந்துள்ள இவ்வழக்கு சொத்தானது வண்டிபாதை என்றால் சரியல்ல. நான் மேற்படி சொத்தானது வண்டிபாதை என்பதை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு சொத்தானது 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளான கிருஷ்ணமூர்த்தி மற்றும் சந்திரசேகர் ஆகியோருக்கு வண்டிவழிபாத்தியம் என விளம்புகை செய்தும், மேற்படி வண்டிவழிபாதையில் 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகளின் அவர்களின் நிலங்களுக்கு செல்வதை நான் தடை செய்யகூடாது என்றும், நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், இவ்வழக்கில் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**வாதிகள் தரப்பில் வா.சா–1 ஆனவர் மறுவிசாரணை செய்யப்படவில்லை.**

SARANYA M Digitally signed by SARANYA M Date: 2025.11.25 16:32:16 +0530